LIBRARY
10 JUN 2013
EASTERN UNIVERSITY, SRI

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2010/2011 (ஜனவரி/பெப்ரவரி 2013)

# GEOS 2103 புவிவெளியுருவவியல் (Geomorphology)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.
பொருத்தமான இடங்களில் விளக்கப்படங்களின் துணையுடன் விடையளிக்குக.

---

01.(அ) 'புவித்தகட்டசைவு' என்பதனால் கருதப்படுவது யாது? தகட்டசைவுக்குக் காரணமாக இருக்கும் புவியின் உட்பாக செயன்முறைகளை விளக்குக.
(08 புள்ளிகள்)

(ஆ) புவிநடுக்க செயற்பாடுகளுக்கும், புவித்தகட்டசைவுக்குமிடையிலான தொடர்பினை விளக்குக.
(07 புள்ளிகள்)

(இ) பசுபிக் வலயத்தில் ஏற்பட்டுவரும் புவிநடுக்கங்கள் தொடர்பாக அண்மைக்கால நிகழ்வுகளை ஆதாரங்காட்டி விளக்குக.
(10 புள்ளிகள்)

02.(அ) 'வானிலையாலழிதல்' எனப்படுவது யாது? மண்ணின் விருத்தியில் வானிலையாலழிதலின் பங்களிப்புப் பற்றி விபரிக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ) மண்ணரிப்புக்குப் பொறுப்பான காரணிகள் யாவை?
(08 புள்ளிகள்)

(இ) மட்பாதுகாப்பு முறைகளை விளக்குக.
(07 புள்ளிகள்)

03.(அ) கரையோர தின்னல் செயல்முறைகளை விளக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ) கரையோர அரித்தல், படிதல் நிலவுருவங்களை வகைப்படுத்துக.
(08 புள்ளிகள்)

(இ) கரையோர அரிப்பினை தூண்டும் காரணிகளைக் குறிப்பிட்டு அவற்றைக் கட்டுப்படுத்த முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளைத் தருக.
(07 புள்ளிகள்)

LIBRARY 10 JUN 201 UNIVERSITY

04.(அ) 'திணிவசைவு' என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அதனைத் தூண்டும் காரணிகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) திணிவசைவினால் ஏற்படுகின்ற தாக்கங்களைப் பரிசீலிக்குக.

(10 புள்ளிகள்)

(இ) திணிவசைவினைக் கட்டுப்படுத்த கையாளும் வழிமுறைகளை இலங்கை, இந்திய அனுபவங்களுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(07 புள்ளிகள்)

05. (அ) வெள்ளத்தின் பிரதான வகைகளைக் குறிப்பிட்டு அவை பற்றி விளக்கம் தருக.

(06 புள்ளிகள்)

(ஆ) வெள்ள அனர்த்தங்களினால் ஏற்படும் பௌதிக, சமூக, பொருளாதார, சூழலியல் தாக்கங்களை ஆசிய நாடுகளின் அனுபவங்களைக் கருத்திற்கொண்டு ஆராய்க.

(14 புள்ளிகள்)

(இ) வெள்ள அனர்த்த முகாமைத்துவம் பற்றி சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினிற்கு விளக்கக் குறிப்புரை எழுதுக.

(அ) புவியின் உட்பாக அமைப்பு
(ஆ) வடிநிலப்பாங்குகள்
(இ) காற்றரிப்பு நிலவுருவங்கள்
(ஈ) இலங்கையின் கரையோர அரிப்பும், கரையோர மாற்றங்களும்

(12.5x2=25 புள்ளிகள்)

***